**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C. C. No. 349/2025** |
| Prosecution witness | : | P.W. 3 |
| List of witness | : | L.W.6 |
| Name | : | அஜய் |
| Father's /Husband Name | : | சுப்ரமணியன் |
| Village | : | சீதக்கமங்களம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 28 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 20th day of May 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 ஐ எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு பகுதி ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 12.07.2023 ம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் நானும் மணிகண்டன் என்பவரும் திருவாரூருக்கு சொந்த வேலையாக சென்று விட்டு வடகண்டம் பெரிய முதலி அய்யனார் கோவில் பஸ் ஸ்டாப் அருகே வந்து கொண்டிருந்தோம் என்றும், அப்போது குடவாசல் போலீசார் ஆஜர் எதிரியை விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும், அருகில் சென்று பார்த்த போது ஆஜர் எதிரி வடகண்டம் வெட்டாற்று பாலம் அருகே இருசக்கர வாகனத்தில் சென்றவரை மறித்து கத்தியை காட்டி பணம் பறித்தார் என்றும் அவர் தனது பெயர் ஜெகதீசன் என்றும், அவரை குடவாசல் போலீசார் எங்கள் முன்பு விசாரித்த போது

ஆஜர் எதிரி தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை பற்றியும், தன் குடும்பத்தைபற்றியும், தன் மீதுள்ள வழக்குகள் பற்றியும், தனது கூட்டாளிகள் பற்றியும் சொன்னார் என்றும், பின்பு கடந்த ஒருவாரமாக பணம் இல்லாத காரணத்தினால் 10.07.2023ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் வடகண்டம் பாலம் அருகே நின்று கொண்டிருந்து யாரேனும் இருசக்கர வாகனத்தில் வருகிறார்களா என்று பார்த்து கொண்டு அவ்வழியாக வந்த அ.சா.1 ஐ நிறுத்தி லிப்ட் கேட்டதாகவும் அவரிடம் கத்தியை காட்டி மிரட்டி அவரிடமிருந்த ரூ.600/-ஐ பறித்து சென்றதாகவும் அதை யாரிடமும் சொன்னால் கொன்று விடுவதாகவும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் எதிரி சொன்னார் என்றும், அவர் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை குடவாசல் போலீசார் மடிக்கணினியில் பதிவு செய்தார்கள் என்றும், பின்பு அவர் வீட்டின் கூறையிலிருந்து எடுத்து கொடுத்த கத்தியை கைப்பற்றினார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. தற்போது எனக்கே தெரிந்த காரணத்தில் ஆஜர் எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :- இல்லை.

**மறு விசாரணை :-** இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.20 12:01:36 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.